# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.59/2025 | Date | : 11.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : தமிழரசன் | Calling | : |
| Father Name | : நாராயணன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.11.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் தற்போது எடப்பாடி, சின்னமணலியில் குடியிருந்து ஒடசகரையிலுள்ள வெங்கடேஷ்வரா பேக்கரியில் டீ மாஸ்ட்ராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 06.01.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நான் வேலை செய்யும் கடைக்கு முன்னால் பொலிரோ வண்டி ஒன்று எதிரே வந்த டி.வி.எஸ். இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. சுமார் 02.30 மணியளவில் போலிசார் சம்பவஇடத்திற்கு வந்தனர். போலிசார் சம்பவஇடத்தில் படம்வரைந்து விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 2 வது சாட்சி கையொபப்ம் என்னுடையதுதான். பார்வைமகஜரிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

கடந்த 06.01.2025 ம் தேதி மாலை 05.15 மணிக்கு போலிசார் சம்பவஇடத்தில் வந்து விசாரித்து மாதிரிவபைரடம் வரைந்து பார்வைமகஜர் தயார்செய்தபோது உடனிருந்த போது பார்வைமகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற நேரத்தை மாற்றி 02.30 மணிக்கு போலிசார் வந்ததாக பிற்ழசாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Tamilarasan